DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.341/12

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name ப்ரோ ஸ்கான் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது மதுரையில் குடியிருக்கிறேன். மாவட்ட கல்விஅலுவலராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். 2005ம் வருடம் கம்பத்தில் உள்ள நாகமணி மெட்ரிகுலேசன் பள்ளியில் தனிதேர்வர்களுக்கான 10ம் வகுப்பு பொது தேர்வு நடந்தது. 31.3.05ம் தேதி தேர்வரின் பெயரை பார்த்ததில் அதில் ஏதோ சந்தேகம் எழுந்தது. தேர்வு எழுதிய 2வது எதிரி மற்றும் அவருடன் தேர்வு எழுதியவர்கள் மற்றும் அங்கு பணியிலிருந்த ஆசிரியர்கள் ஆகியோர்களை உத்தமபாளையம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் வைத்து விசாரித்தேன். 2ம் எதிரி கால்டிக்கெட்டிலிருந்த தலைமை ஆசிரியிரின் கையெப்பம் மற்றும் அவருடன் சேர்ந்து எழுதிய கால்டிக்கெட்டிலிருந்த தலைமைஆசிரியரின் கையெப்பத்தை தெரிந்து கொள்வதற்காக எல்லா தலைமை ஆசிரியர்களையும் மாவட்ட கல்வி அலுவலகம் வரவழைத்து விசாரித்தேன். அதன் மூலம் 2ம் எதிரி புகைப்படம் ஒட்டபட்டிருந்த கால்டிக்கெட்டிலிருந்த கையெழுத்து அந்த தலைமை ஆசிரியர் போடவில்லை என்று என்னிடம் சொன்னார். அதன்பிறகு மறுநாள் தேர்வு எழுதும் போது 2ம் எதிரியை கையும் களவுமாக பிடித்து அலுவலகத்தில் வைத்து விசாரித்ததில் அவர் 1ம் எதிரிக்குபதிலாக தேர்வு எழுதியது தெரியவந்தது. நான் மேற்படி பள்ளி முதல்வரிடம் காவல்துறைக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்கும்படி பரிந்துரை செய்துவிட்டு நான் என்னுடைய அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். முதல்வரிடம் இருந்து வந்த ரிப்போர்ட் மற்றும் நான் மேற்கொண்ட நடவடிக்கைகள்ஆகியவற்றை குறிப்பாக எழுதி மண்டல இணை இயக்குனர் மதுரை அவர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தது 2005ம் வருடம் என்றால் சரிதான். சம்பவம்பற்றி அப்போதே தெரியும். ஆள்மாறாட்டம் பற்றி நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் சம்பவம் நடந்து 2 நாட்களில் விசாரித்தார்கள். அதன்பின்பு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்மன் கொடுக்க வந்தார்கள். முதல்விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் என்னை விசாரிக்கும் போதும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் பற்றி எனக்க நேரடியாக தெரியாது என்றாலும், அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் சொல்லி அதனடிப்படையில் நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியலல். சம்பவம் பற்றி எனக்கு உடனே தெரிந்திருந்தால் நான் காவல்நிலையத்தில் அன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சம்பவம் பற்றி தெரியாததால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.